


05. 06. 2026

## தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திரமோடி குஜராத், டையூ, டாமன் மற்றும் லட்சத்தீவில் 22 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று தொடங்கி வைக்கிறார்.
- அரசு பத்திரங்களில் வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.
- தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும் 18-ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கும் என்று பேரவைத் தலைவர் திரு. J.C.D. பிரபாகர் அறிவித்துள்ளார்.
- பதினெட்டு வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி அரையிறுதியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி குஜராத், டையூ, டாமன் மற்றும் லட்சத்தீவில் 22 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கும் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

இதன்படி குஜராத் மாநிலம் சூரத்தில் சாலைகள், சுகாதாரம், மின்சாரம், தொழில்துறை மற்றும்

உள்கட்டமைப்பு தொடர்பாக 18 ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கும் அதிகமான திட்டங்களை தொடங்கி வைப்பதோடு,

வதோதரா – மும்பை விரைவுச் சாலையின் முக்கிய பகுதிகள் மற்றும் மருத்துவமனை வளாகத்தையும் தொடங்கி வைக்கிறார்.

டாமனில் நமோ விமான நிலையத்தின் புதிய முனையத்தை தொடங்கிவைப்பதோடு,

நமோ மருத்துவமனையையும் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

தொடர்ந்து லட்சத்தீவு யூனியன் பிரதேச மேம்பாட்டிற்காக 885 கோடி ரூபாய் மதிப்பிலான 4 முக்கிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டி பிரதமர் உரையாற்றவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

பத்ம விருதுகள்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை இரண்டாவது கட்டமாக வரும் 23-ம் தேதி வழங்கவுள்ளார்.

குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 65 பேருக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

கடந்தமாதம் 23-ம் தேதி 5 பேருக்கு பத்ம விபூஷன் விருதுகளையும்,

13 பேருக்கு பத்ம பூஷன் விருதுகளையும்,

113 பேருக்கு பத்ம ஸ்ரீ விருதுகளையும் குடியரசு தலைவர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖

## பத்திரங்கள்

அரசு பத்திரங்களில் வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் அரசு பத்திர சந்தையை வலுப்படுத்தவும், வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீட்டை ஈர்க்கவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த வரிச்சலுகை ஏப்ரல் ஒன்றாம் தேதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

## சஞ்சய் மல்ஹோத்ரா

ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதங்களில் நடப்பாண்டில் இரண்டாவது முறையாக எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

மும்பையில் ரிசர்வ் வங்கியின் இருமாத நிதிக் கொள்கையை இன்று வெளியிட்டு பேசிய அதன் ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா, ரிசர்வ் வங்கி, பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 5.25 சதவிகிதமாக நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு 6.6 சதவிகிதமாக குறைந்துள்ளதாக தெரிவித்தார்.

நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பணவீக்க மதிப்பீடு 5.1 சதகிவிதமாக உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

சுற்றுச்சூழல் தினம்

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலையான வாழ்க்கை முறை பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் மக்கள் தங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள செய்தியில், நீடித்த தூய்மையான, பசுமையான உலகை உருவாக்க இந்தியா தொடர்ந்து பங்காற்றும் என்று தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் வனப்பரப்பை அதிகரிப்பதில் உலகின் முதல் 3 நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக மத்திய ஆயுத காவல்படைகள் கடந்த 6 ஆண்டுகளில் 7.5 கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

புதுதில்லியில் மத்திய அமைச்சர்கள் திரு. பபூபேந்தர் யாதவ், திரு. கீர்த்தி வர்தன் ஆகியோர் அன்னையின் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ் மரக்கன்றுகளை நட்டுவைத்தனர்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில் வருங்கால தலைமுறையினருக்காக நமது பூமியை பாதுகாத்து பேணி பராமரிப்பதற்கான உறுதிப்பாட்டை வலியுறுத்துவோம் என்று கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மிருணாளினி மரக்கன்றுகளை நட்டுவைத்து

விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத், அரசு பள்ளி மாணாக்கர் தயாரிக்கும் விதைப்பந்துகள் வனப்பகுதிகளில் வீசப்படவுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

.... MUSIC ....

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, கடந்த 12 ஆண்டுகளில் நம்பிக்கை, கட்டமைப்பு, மக்கள் நலன் சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் பசுமைமயமாக்கலில் முத்திரை பதித்து வருவது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.... MUSIC ....

உலகளாவிய தலைமைத்துவம், ஒருங்கிணைந்த முயற்சிகளால் பருவநிலை மாற்றங்களை முன்னெடுத்து செல்லும் முன்னோடி நாடாக இந்தியா செயலாற்றி வருகிறது.

ஒரே நாடு ! ஒரே பூமி ! என்ற கோட்பாட்டின் அடிப்படையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கட்மைப்பை உருவாக்குவதிலும் இந்தியா தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

பாரீஸ் ஒப்பந்தத்திற்கான அர்ப்பணிப்புகளை விரைவுப்படுத்தி, உலக நாடுகளிடையே இதுசார்ந்த ஒருமித்த கருத்தை உருவாக்குவதிலும் இந்தியா இன்றியமையா பங்காற்றியுள்ளது.

மத்திய அரசின் தொடர் நடவடிக்கைகளால் நாட்டின் வனப்பரப்பு விரிவடைந்ததோடு, அலையாத்தி காடுகளால், கடலோர சூழலியல் அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்டப்பட்டு பசுமை மேம்படுத்தப்பட்டுள்ளது.

நமாமி கங்கை திட்டத்தின் மூலம் கங்கை நதியின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதோடு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு நடவடிக்கைகளும் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

பல்லுயிர் பாதுகாப்பில் சிறப்பான முன்னேற்றத்தை நம்நாடு உருவெடுத்துள்ளதோடு, புலி, சிறுத்தை உள்ளிட்ட

ஏழு வகை விலங்கினங்களை பாதுகாக்கும் சக்தியாகவும் இந்தியா செயலாற்றி வருகிறது.

நம்பிக்கை, கட்டமைப்பு, மக்கள் நலன் என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் மத்திய அரசின் பசுமை மயமாக்கல் குறித்து திருச்சியை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் திரு. ராஜா தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படும் இந்நாளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியா முன்னோடி நாடாக திகழ்வது குறிப்பிடத்தக்கது.

.... MUSIC ....

❖❖❖❖❖❖❖❖❖❖

அமைச்சரவை கூட்டம்

தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

துறை வாரியாக செயல்படுத்த வேண்டிய திட்டங்கள், அதற்கான இலக்குகள் ஆகியவை குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார், வேளாண், மீன்வளம், கால்நடை, தொழில்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கென 436 திட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

போதையில்லா தமிழகத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு, மேகதாது அணை விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவை வரும் 18-ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்குகிறது.

சென்னை தலைமை செயலகத்தில் இதுதொடர்பாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய பேரவைத்தலைவர் திரு. J.C.D. பிரபாகர் இக்கூட்டத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

காயிதே மில்லத்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவரும், சுதந்திர போராட்ட வீரருமான காயிதே மில்லத்தின் 131-வது பிறந்த நாளையொட்டி சென்னை திருவல்லிக்கேணி பெரியபள்ளி வாசலில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் முதலமைச்சர் திரு. விஜய் இன்று மலர் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அன்னாரது நினைவிடத்தில் இன்று மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

அருண்ராஜ்

உயர் சிறப்பு மருத்துவ இட விவகாரத்தில் தமிழக மருத்துவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் உச்சநீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிராமப்புற மக்களுக்கும் உயரிய மருத்துவ சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதிலும், மருத்துவ இட ஒதுக்கீட்டு நிலைப்பாட்டிலும் அரசு உறுதியுடன் துரிதமாக செயல்படும் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

அண்ணாமலை

பி.ஜே.பி முன்னாள் மாநிலத்தலைவர்திரு. அண்ணாமலையின் ராஜினாமாவை பி.ஜே.பி ஏற்றுக்

கொண்டதாக அக்கட்சியின் தேசிய தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புதிய இயக்கத்தை தொடங்க உள்ளதாக திரு. அண்ணாமலை இன்று அறிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

தாம்பரம் மாநகராட்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணாக்கருக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை மாநில மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. சரத்குமார் இன்று வழங்கினார்.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த கனமழை காரணமாக நெல்லை மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் களக்காடு தலையணையில் 2-வது நாளாக இன்றும் தடைநீடிக்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

ஜப்பானில் நடைபெறும் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் ஆடவர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖